# புறநானூற்று பாடலில் போர்த்திறம்

**முனைவர் அ.அருணா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஊற்றங்கரை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**முன்னுரை**

சங்கத் தமிழ்ப் பண்பாடு, சங்க காலம், சங்கம் என்பன தமிழகத்தின் பழங்கால நீண்ட நெடிய வரலாற்றை நமக்கு இன்னும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. அக்காலத்தைத் தெளிவாக்கும் சான்று படைத்துள்ள மக்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நோக்கோடு எல்லா உயிரிடத்தும் அன்பு, அறம் காட்டி வாழ்ந்து வந்தனர். சங்கத் தமிழ் வேந்தர்கள் போர்த்துறையில் சிறந்திருந்தனர். அதிலும், நாகரிகத்தை வகுத்து வளர்த்தனர். போர்நெறி அறவழி அடிப்படையில் நின்றது என்பதனைப் புறநானூற்று பாடலின் வழி போர்த்திறம் பற்றிய செய்திகளை விளங்கக் காண்போம்.

அறப்போர்

போர் நெறிக்கு இலக்கணம் வகுத்துப் போர் முறையில்கூட அறம் வளர்த்த பெருமை சங்க காலத் தழிழருக்கே உரியது என்பதனை,

**"அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்**
**தாம் மாய்ந்தனரே; குடை துளங்கினவே;" (புறம் - 62)**

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற் கிள்ளியும் பெரிய போரைச் செய்தனர். இருவர் தம் படைகளும் அழிந்தன; பின்னும், அறத்தின் தன்மைகள் செறிந்த வீரப்போரைச் செய்யும் வேந்தர் இருவரும் இறந்தனர்.

**போர்க்கள வீரம்**

போர்க்களத்தில் போரிடும் வீரம் வேண்டி, உயிரை வேண்டாராய்ப் பொருது வீழ்ந்தனர். அவர்களைக் கல்லில் நட்டுக் கடவுளாய் போற்றினர். சங்க காலப்பெண்டிரும் வீரம் பெற்றனர். தன் கணவன், மகன், சகோதரனையும் கூடப் போருக்கு அனுப்பினர். பசு, பார்ப்பனர், பெண்டிர், பணியாளர், மூத்தோர், குழந்தைகள், பிள்ளைப் பேறில்லா ஆடவர் இவர்களைப் பாதுகாத்துப் படைவீரர்களுடன் மட்டுமே போர் புரியும் முறை இருந்தது இதனை,

**"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்**
**எம்கோ, வாழிய, குடுமி – நம்கோச்" (புறம் - 9)**

பசு முதலாகிய பலரையும் காத்தல் அரசர் தம் கடமை. மாற்றரசாயினும் முன் அறிவிப்பு செய்து போரால் அவர் இடையூறு அடையாதிருக்குமாறு கூறினான். உலகிலேயே போரில் கூட அறம் கண்ட மக்கள் தமிழர்களே! அதுமட்டும் அல்லாமல், புறங்காட்டுபவனைக் கூட கொல்லாது நாகரீகம்

பேணிய சமுதாயம் தமிழ்ச் சமுதாயமேயாகும் என்பதை பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய படலின் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

மேலும், பலி பெறுவதற்கு இடமான நல்ல கோயில்கள், துறவிகள் உறையும் பள்ளிகள், நான்கு மறைகளை ஓதுகின்ற பார்ப்பனர் வீடுகள் ஆகிய இடங்களுக்கு எந்தக் கெடுதலும் நிகழாதவாறு வஞ்சி மறவர் போரிட்டனர் போன்ற இடங்களில் சென்று மறைந்து கொண்ட பகை மறவர்களுக்கும் ஊறு செய்யவில்லை. என்பதனை,

**"புலிபெறு நன்னகரும் பள்ளி இடனும்**
**ஒலிகெழு நான்மறையோர் இல்லும் - நலி(வு) ஒரி,**
**புல்லார் இரியப் பொருதார் முனைகெடுத்த**
**வில்லார்க்கு அருள்சுரந்தான் வேந்து." (புறப்பொருள்: வெண்பா – 7)**

வஞ்சி மன்னன் அவர்களுக்குப் பொருள் வழங்கிச் சிறப்புச்செய்து தம் புகழை நிலை நாட்டினான் என்பதைப் புறப்பொருள் வெண்பாமாலையின் மூலம் அறிய முடிகிறது.

### தமிழ் வேந்தர் வீரம்

மன்னர்க்குப் படைவீரர்களே உடம்பாகும். பாண்டிய மன்னரையும், படை வீரர்களையும் பெரும் புலவர் ஒருவர் பாராட்டி உள்ளார்.

**"நின்னாடு, கொன்று மூத்த உயிரினும், உயிரோடு**
**நின்று மூத்த யாக்கைஅன்ன, நின்**
**ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த**
**வாளின் வாழ்நர் தாள் வலம் வாழ்த்த," (புறம் - 24)**

உன்னுடைய மூத்த உயிரைவிட, உயிருடன் விளங்கி முதிர்த்த உடலைப் போன்றது, உன் வெற்றியையுடைய குடி; அக்குடியின் பழைமையும் சிறப்பும் உடைய குலத்தில் பிறந்த வாட்போர் வல்லவர் உன் முயற்சியின் வலிமையை வாழ்த்தட்டும், இரவலர்கள் உன் கொடையைப் புகழட்டும், மகிழ்ச்சி நிறைந்த வல்ல வரையே உலகத்து அறிஞர் வாழ்த்துவர் என மாங்குடி கிழார் பாடிய பாடலின் வழி அறிய முடிகிறது. மேலும், செங்குட்டுவனையும் அவனுக்கு உடம்பாக விளங்கிய சேனையையும் அரசர் பெருமானது திருமேனியாக விளங்கும் சேனா முகம் வாழ்க! எனப் பறையறைவோன் வாழ்த்தியதாக இளங்கோவடிகள் கூறுகிறார்.

### தமிழ் மன்னர் போர் ஆற்றல்

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் வீரத்தையும், எண்ணியது முடிக்கும் திறம், அவன் படையும் குறித்து

**"வரை புரையும் மழ களிற்றின் மிசை,**
**வான் துடைக்கும் வகைய போல,**
**விரவு உருவின கொடி நுடங்கும்**
**வியன் தானை விறல் வேந்தே!" (புறம் - 38)**

பரந்த படைகளுடைய வெற்றி வேந்தனே! நீ சினந்து பார்க்குமிடம் தீப்பற்றும்; நீ அருளுடன் பார்க்குமிடம் பொன் பொலியும்; நீ செம்மையான ஞாயிற்றில் நிலவுண்டாக்க வேண்டினாலும், வெண்மையான நிலவிடம் வெயிலை உண்டாக்க வேண்டினாலும் வேண்டியவற்றை உண்டாக்கும் வலிமையுடையவன் என மூலங்கிழார் மன்னனின் போர் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

### ஆரிய மன்னனின் அச்சம்

தமிழ் மன்னர்களின் ஆற்றல், போர்த்திறம், போர் விரும்பும் தமிழ் வீரர் தம், ஊக்கம் கண்டு ஆரிய மன்னர்கள் தங்கள் நாட்டின் மீது தமிழ்ப்படை வருதலும் கூடும் என எண்ணி உறக்கமின்றி வருந்தினர் என்பதை,

**“வலமுறை வருதலும் உண்டுஎன்று அலமந்து**
**நெஞ்சு நடுங்கு அவலம் பாய,**
**துஞ்சாக் கண்ண, வடபுலத்து அரசே” (புறம் - 31)**

மேலும், புலியெழுந்தது போல மாறன்வழுதி போர் செய்ய எழுந்தால் வடபுல மன்னர் தம் நிலையை எண்ணி வருந்தினர் என்பதை மருதன்இளநாகனார் புறநானூற்றில் 52ஆவது பாடலில் குறிப்பிடுகிறார்.

### போர் கருவிகளின் நிலை

சங்கத் தமிழ்வேந்தர் தம் போர்க் கருவிகளைப் போர் முடிந்த பின்னர் பொலிவிழந்து பழுதடைந்திருந்ததைச் செம்மை செய்ய கொல்லரின் உலைக்களத்திற்கு அனுப்பிவைத்தனர் என்பதனை,

**“பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து**
**கொல் துறைக் குற்றிலமாதோ” - என்றும் (புறம் - 95)**

என்ற வரிகளில் அதியமான்நெடுமான்அஞ்சியை ஔவையார் பாடிய கூற்றால் தெரியவருகிறது.

### பகைநாடு அழித்தல்

தமிழ் மன்னர் தம் பகை மன்னர் மீது போர் புரிந்த போது பகைவரை அழித்து அவர்களது முரசும் குடையும் கலனும் கைக்கொண்டனர். இதை பின்வரும் பாடல் வரிகள்மூலம் அறியலாம்.

**“தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்,**
**ஏழ்எயிற் கதவம்எறிந்து, கைக்கொண்டு, நின்**
**பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை” (புறம் - 33)**

### அடையாளச் சின்னம் வைத்தல்

பகை நாட்டின் வளம் அழித்து செல்லும் ஆற்றலுடைய கிள்ளிவளவன் பகைவரை வென்று அங்கு தம் இலச்சினையை பொறித்தனர்.

**“அடுகளத்து உயர்க, நும்வேலே; கொடுவரிக்**
**கோண்மாக் குயின்ற சேண்விளங்கு கொடுபொறி**
**நெடு நீர்க் கெண்டையொடு பொறித்த” (புறம் - 58)**

இருபெருவேந்தரும் சினந்தால் பகைவர் நாடுகள் அவர் கைப்படும் என்பதை, புலிப் பொறியும் மீன்பொறியும் பொறிக்கப்பட்ட சிகரங்களை உடையனவாகும் என்பதனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடலின்வழி தெளியலாம்.

### முடிவுரை

சங்க காலத் தமிழ்வேந்தர்கள் அறத்தின்பாற்பட்ட போரியல் நெறியில் வழுவாது போர்புரிந்து வெற்றிப் பெருமிதத்தோடும், போர் மறவர் வெற்றிப் புகழ்கொண்டும் வாழ்ந்தனர். மன்னர்கள் அறப்போர், வீரம், போர்க்கருவிகள், போர்ஆற்றல், போர்முறைச் செயல்கள், பகைநாடு அழித்தல், அடையாளச்சின்னம்பொறித்தல் போன்றவற்றால் சங்க கால மன்னர்களுடைய போர் ஆற்றல்களை அறிந்துகொள்ள சங்க நூல்கள் துணைபுரிகின்றன. சங்க காலப் போர் முறைக்கும் இக்கால போர்முறைக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. அக்காலத்தில் நேச நாடுகளுக்கும், எதிரி நாடுகளும் நேருக்கு நேர் நின்று அறநெறிப் படிப் போர் செய்தனர். இக்காலத்தில் அறநெறி இல்லாமல் ஆகாயத்திலும் தரையிலும் கடலிலும் வரைமுறை இல்லாமல் எதிரிகள் தாக்கப்படுகிறார்கள் என்பதை இக்கட்டுரையின் வழியாக அறியமுடிகிறது.

### துணை நின்ற நூல்கள்

1. பரிமணம்.அ.மா(ப.ஆ) - புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,சென்னை, 2004
2. திருஞானசம்பந்தம்.ச - புறப்பொருள் வெண்பாமாலை, கதிர் பதிப்பகம், திருவையாறு, 2006.
3. வரதராசன்.மு - திருக்குறள் தெளிவுரை.